**செ.வெ.எண்:53** **நாள்:23.11.2021**

**பத்திரிக்கை செய்தி**

**2021–2022 ஆம் நிதியாண்டிற்கான தாட்கோ பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் பெற்று பயன்பெற விருப்பமுள்ள பட்டியலின அருந்ததியர் உள்ளிட்ட அனைத்து ஆதிதிராவிடர்/பழங்குடியினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**இது குறித்து, கரூர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்ட செய்திகுறிப்பு**

தாட்கோ மகளிர் நிலம் வாங்கும் திட்டம், நிலம் மேம்பாடு திட்டம், துரித மின் இணைப்பு திட்டம், கிணறு அமைத்தல் திட்டம், பெட்ரோல் டீசல், சமையல் எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல், தொழில் முனைவோர் திட்டம், ஆகிய திட்டங்களின் கீழ், மானியத்துடன் கூடிய கடன் பெற 18 வயது முதல் 65 வயது வரையுள்ள **பட்டியலின அருந்ததியர் உள்ளிட்ட** அனைத்து விருப்பமுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியின இனத்தைச் சார்ந்த நபர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு **ஆண்டுக்கு ரூ.2.00** இலட்சத்திற்குள் இருக்கவேண்டும். இதே போல், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு சிறப்பு திட்டம், அதில் மருத்துவமையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், மூடநீக்க மையம், இரத்த பரிசோதனை நிலையம் மற்றும் அதனை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு வயது வரம்பு 18 வயது முதல் 45 வயதும், குடும்ப ஆண்டு **வருமான உச்சவரம்பு ஆண்டுக்கு ரூ. 3.00 இலட்சத்திற்குள் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.** மேலும், ஆதிதிராவிடர் / பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார **கடன்களுக்கு 50%** மானியத்துடன் கூடிய **கடனுதவி** வழங்கப்படும்.

தகுதிவாய்ந்த **பட்டியலின அருந்ததியர் உள்ளிட்ட** அனைத்து விருப்பமுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி, திட்டங்களின்கீழ் பயன்பெற தாட்கோ இணையதள முகவரி **http://application.tahdco.com** வழியே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ / நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை. விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பதாரர் பற்றிய முழு விவரங்கள், புகைப்படம், சாதிச்சான்று, வருமானச்சான்றிதழ், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, விலைப்புள்ளி, விண்ணப்பதாரரின் தொலைபேசி / கைபேசி மின்னஞ்சல் முகவரி, திட்ட அறிக்கை ஆகியவற்றினை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யப்படவேண்டும். இணையதளத்தில் 24 மணி நேரமும் பதிவு செய்யலாம் என்ற தகவலை **கரூர்** மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.த.பிரபு சங்கர், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மேலும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோவின்) மூலமாக **பட்டியலின அருந்ததியர் உள்ளிட்ட** அனைத்து விருப்பமுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின படித்த வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு குறுகிய கால (ஒன்று முதல் ஆறு மாதம் வரையிலான) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கட்டணமில்லாமல் அளிக்கப்படுகிறது.

மாணாக்கர்களின் தகுதிக்கேற்ப **பட்டியலின அருந்ததியர் உள்ளிட்ட** அனைத்து விருப்பமுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின படித்த வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு தங்களுக்கு தேவைப்படும் தொழில் நுட்ப பயிற்சியினை மேற்கொள்ள, தாட்கோவின் www.training.tahdco.com என்ற இணையதளத்தின் வழியே பதிவேற்றம் செய்து தாங்கள் விரும்பும் பயிற்சியினை கொண்டு இத்திட்டத்தின் மூலம் கட்டணமின்றி பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் படித்த வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு போக்குவரத்து படிகள் வழங்கப்படும். இப்பயிற்சியின் முடிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு SCVT / SSC சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும்.

திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து சான்று பெற்ற பயிற்சியாளர்கள் மாவட்ட மேலாளரிடம் தாங்கள் பயின்ற பயிற்சிக்கு தொடர்பான தொழில் தொடங்கிட, http://tahdco.application.com தாட்கோ இணையதளத்தில் விண்ணப்பத்தினை பதிவு செய்து தொழில் முனைவோர் திட்டம் (EDP) மற்றும் இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு (SEPY) திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். அரசு மானியத்துடன் கூடிய வங்கிகடன் வழங்க ஆவண செய்யப்படும். **பட்டியலின அருந்ததியர் உள்ளிட்ட** அனைத்து விருப்பமுள்ள ஆதிதிராவிட / பழங்குடியினர் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்ற தகவலை கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

**வெளியீடு:செய்திமக்கள்தொடர்புஅலுவலர்,கரூர்.**